# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : பள்ளிக்கூடங்களை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## பப்ளிக் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி உடமைகள்

பப்ளிக் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் பப்ளிக் பள்ளிகளுக்கு சொந்தமான இடங்களில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. புகை அற்ற ஒன்டேரியோ சட்டத்தின் கீழ், தனியார் பள்ளியுடன் குறிப்பாக சேர்க்கப்பட்ட/ உபயோகிக்கப்படும் தனியார் பள்ளி உடமைகள் உள்ளிட்டவற்றில் (உதாரணமாக விளையாட்டுத்திடல்) புகை பிடித்தல் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

## வேலை கொடுப்பவரின் அல்லது பொறுப்பாளரின் கடமைப் பொறுப்புக்கள்

- ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் வருநதனர்கள் புகை பிடித்தல் தடை உத்தரவுகளை அறிந்திருப்பதை உறுதிபடுத்து வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பள்ளிப் பகுதிகளில் புகை பிடிக்காமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- அச்சட்ட விதிகளுடன் ஒத்துப்போகாத நபர் அங்கு தொடர்ந்து இல்லாமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## அமலாக்கம்

இச்சட்டத்தை அமல்படுத்த உள்ளூர் பொது சுகாதார பிரிவுகள் பள்ளிகளை பார்வையிட்டு, குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario